DEPOSITION OF WITNESS

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**UTHIRAMERUR.**

**CC. No.8 of 2025**
**LW- 6 Examined as PW- 5**

| | |
|---|---|
| Name: **விக்னேஷ்** | Age: |
| Father Name: **நாகேந்திரன்**<br>Husband Name : | Profession: |
| Address: | |
| The Oath was administered to the witness by Mr.Siva Raj, Gr.III Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of the Oaths Act of 1969 on 07.07.2026 | |

**07.07.2026**

எதிரி ஆஜர்.

**விசாரணை தொடங்கிய நேரம் 3.30 PM**

**அ.சா.5. – முதல் விசாரணை**

நான் ஸ்ரீபெரும்புதூரில் உள்ள அரசுக்கு சொந்தமான இந்தியன் ஆயில் கார்ப்ரேஷனில் டெக்னிக்கல் அசிஸ்டன்டாக வேலை செய்துவருகிறேன். அ.சா.1 கங்காதரன் எங்கள் ஊரில் வசிக்கிறார். கடந்த 20.05.2024 ம் தேதி மேற்படி கங்காதரன் வீட்டு அருகில் கன்னியப்பன் என்பவர் கங்காதரனை தாக்கியதாக கேள்விபட்டேன். மறுநாள் 21.05.2024 ம் தேதி போலிசார் கங்காதரன் வீட்டிற்கு வந்து பார்வையிட்டு வரைபடம் வரைந்தனர். அப்போது நான் அங்கிருந்தேன். அதற்கு பிறகு காலை சுமார் 11.00 மணிக்கு ஒரு கட்டையை போலிசார் அங்கிருந்து கைப்பற்றினார்கள். என்னிடம் காட்டப்படும் கட்டையை தான் போலிசார் கைப்பற்றினார். மேற்படி கட்டை சா.பொ.1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **மேற்படி பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். **கைப்பற்றுதல்**

**மகசர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் கங்காதரன் மகன் தீனதயாளன் என்பவரும் கையொப்பம் செய்தார். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் டிப்ளோமோ மெக்கானிக்கல் படித்துள்ளேன். எனது பணி நேரம் என்னவென்றால் மதியம் 2.00 முதல் இரவு 10.00 மணி வரையாகும். எனது பணிநேரம் வாராந்திரம் மாறிக்கொண்டே இருக்கும். எனது வீடு எங்குள்ளது என்றால் சம்பவம் நடந்த இடத்திற்கு அருகில் உள்ள ஜங்சனில் இருந்து இடது புறமாக எனது வீடு உள்ளது. நான் அவ்வபோது தீனதயாளன் வீட்டிற்கு செல்வது வழக்கமா என்றால் வழக்கம் தான். அவர் எனது நண்பரா அல்லது உறவினரா என்றால் தெரிந்த நபர் ஆவார். போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டதாக சொல்லும் சமையத்தில் எத்தனை மணிக்கு நான் அங்கு வந்தேன் என்றால் நான் காலை 10.30 மணிக்கு சம்பவ இடத்திற்கு அருகில் தான் இருந்தேன். போலிசார் அங்கு 11.00 மணிக்கு வந்தார்கள். எத்தனை போலிசார்கள் அங்கு வந்தார்கள் என்றால் இரண்டு போலிசார் வந்தார்கள். அவர்கள் யார் என்ற விவரம் எனக்கு தெரியாது. அவர்கள் எப்படி வந்தார்கள் என்றால் இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். நான் எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் இரண்டு கையொப்பம் செய்தேன். வெற்றுதாளில் எழுதி பின்னர் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதி இருந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தற்போது ஞாபகம் இல்லை ஆனால் கையொப்பம் போடும் சமையத்தில் என்னிடம் படித்து காண்பித்தார்கள். வழக்கு குறித்து நான் காவல் நிலையம் சென்றிருந்தேனா என்றால் சென்றிருந்தேன். தடியை கைப்பற்றியதாக

குறிப்பிட்டுள்ள நிலையில் அதனை போலிசார் தான் சென்று எடுத்தார்கள் என்றால் சரிதான். மேற்படி தடிதான் சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்டதா என்ற விவரம் எனக்கும் தீனதயாளனுக்கும் தெரியாது என்றாலும் போலிசார் அந்த தடியை எடுதற்கு நான் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தீனதாயளனும் காவல் நிலையத்திற்கு இந்த வழக்கு சம்பந்தமாக சென்றபோதுதான் எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரியல்ல.,, எங்கள் வீட்டு அருகில் தான் பெற்றார்கள். நான் சொன்ன தேதி நேரம் மற்றும் இடத்தில் வைத்து நான் பார்வை மகசரிலும் கைப்பற்றுதல் மகசரிலும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எந்த தடியும் சம்பவ இடத்தில் இருந்து கைப்பற்றபடபவில்லை என்றால் சரியல்ல. போலிசார் சொல்லிக்கொடுததன் பேரில் தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்களா என்றால் இல்லை. தீனதாயளனும் என்னுடன் கையொப்பம் செய்ததாக நான் வழக்கிற்காக பொ்யயாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தீனதாயளன் என்னுடைய நெருங்கிய நண்பர் என்பதினால் அவருக்கு பவ்வியப்பட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 3.45 PM**

**Sd/R.கிருத்தியா,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,**
**உத்திரமேரூர்.**